# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 564 / 2016. |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : செல்வம். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.12.2023.

\- - - - - - -

1 முதல் 7 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது, டி.ராமநாதபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். சம்பவத்தின்போது, எம்.கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்துவந்தேன். கடந்த 29.08.2016 ஆம் தேதி, 20 மணியளவில் எங்களுடைய காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மற்றும் என்னுடன் பணிபுரியும் வினோத் ஏட்டையா, அம்மாவாசை H.C. 775, திருப்பதி H.C. 858 ஆகியோர்களுடன் டி. பாறைப்பட்டி ஏரியாவில் ரோந்து செய்துகொண்டிருந்தபோது, சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த

தவலின்பேரில் சுமார் 20 மணியளவில் டி. கிருஷ்ணாபுரம் முதல் பேரையூர் ரோட்டிற்கு வடக்குப் பக்கம் துல்லுக்குட்டி நாயக்கனூரைச் சேர்ந்த சந்திரன் என்பவரின் தோட்டத்தில் ஒரு கார் மற்றும் இரண்டு டு வீலர்களில் அவரது தோட்டத்தில் ஆட்கள் நிறைய உட்கார்ந்திருந்ததாகக் கிடைத்த தகவலின்பேரில், சார்பு ஆய்வாளருடன் சோதனை செய்தபோது, அங்கு பாப்பிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த மாரியப்பன் மற்றும் துல்லுக்குட்டி நாயக்கனூரைச் சேர்ந்த சந்திரன் மற்றும் பாண்டிச்சேரி, திருப்பரங்குன்றம் அவர்களுடன் மொத்தம் 7 பேர்கள் இருந்தார்கள். அவர்கள் வைத்திருந்த காரில் சோதனை செய்தபோது, அப்போது சுமார் 20.15 மணியிருக்கும். அந்த காரில் மண்வெட்டி, கடப்பாரை, அரிவாள் மற்றும் ஆயுதங்கள் வைத்தருந்தார்கள். அவர்களிடம் விசாரித்தபோது, பழைய கோவில்களில் உள்ள கலசத்தை திருடுவதற்காக பேரையூர் மற்றும் எம்.கல்லுப்பட்டிப் பகுதியில் திருடுவதற்காக திட்டம் தீட்டிக்கொண்டிருந்தவர்களை விசாரித்தபோது, அவர்களது வாகனத்திலிருந்த காடாத் துணி மற்றும், பாலிஸ் டப்பா, ஒட்டக்கூடிய டேப் அவற்றிற்கு பயன்படுத்தக்கூடிய அனைத்துப் பொருட்களையும் வைத்திருந்தார்கள். பின்பு, சார்பு ஆய்வாளர் அவர்கள் அத்திப்பட்டிப் பகுதி ரெவின்யூ ஆர்.ஐ. கருப்பையா அவர்களையும், துல்லுக்குட்டிநாயக்கனூர் தலையாரி அவர்களையும் சம்பவ இடத்திற்கு வரச்சொல்லி அவர்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் அவர்கள் ஆர்.ஐ. முன்னிலையில் அவர்களுடைய பொருட்கள் அனைத்தையும் தணிக்கை செய்தார்கள். அப்போது பாப்பிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த மாரியப்பன் என்பவர் தானாக முன்வந்து நாங்கள் அனைவரும் கலசம் திருடுவது சம்பந்தமாக வந்ததை ஒப்புக்கொண்டார். அதன்பின்பு 30.08.2016 ஆம் தேதி சுமார் அதிகாலை

00.15 மணியளவில் அவர்கள் அனைவரையும் கைது செய்து நிலையத்தில் ஆஜர் செய்தோம். இதற்கு சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தோம். என்னை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை -

பொதுவாக, காவல் நிலையத்திலிருந்து ரோந்து செல்லும்போது காவல் நிலையத்தில் உள்ள ஜி.டி. பதிவேட்டில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் காவல் நிலையத்தில் உள்ள ஜி.டி. பதிவேட்டில் நாங்கள் ரோந்து சென்ற விபரம் துலங்குமா என்றால் எனக்குத் தெரியாது. அது சார்பு ஆய்வாளர்தான் எழுதுவார். அப்போது எங்கள் காவல்நிலையத்தில் எத்தனை பேர்கள் சார்பு ஆய்வாளர் இருந்தார்கள் என்றால் ஒரு சார்பு ஆய்வாளர் சங்கையா மட்டும்தான் இருந்தார். சார்பு ஆய்வாளர் காவல் நிலையத்திலிருந்து கிடைத்த தகவலின்பேரில் எங்களுக்கு போன் மூலம் தகவல்சொல்லி ரோந்துக்கு எங்களுடன் வந்து இணைந்தார். காவல் நிலையத்திலிருந்து நாங்கள் 4 பேரும் மொத்தமாக ரோந்துக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் 4 பேரும் எவ்வாறு போனோம் என்றால் 2 பைக்கில் நாங்கள் 4 பேரும் சென்றோம். அது யாருடைய பைக் என்றால் என்னுடைய பைக் மற்றும் மற்றொன்று அம்மாவாசையினுடையது. என்னுடைய பைக்கின் வகை கீரோ கோண்டா ஸ்பிலெண்டர் பிளஸ். அம்மாவாசையின் பைக்கும் கீரோ கோண்டா ஸ்பிலெண்டர் பிளஸ் தான். சார்பு ஆய்வாளர் அவருக்குச் சொந்தமான கீரோ கோண்டா பேசன் வண்டியில் வந்தார். சார்பு ஆய்வாளர் காவல் நிலையத்திலிருந்து யாருக்கு போன் செய்தார் என்றால் எனக்குத்தான் போன் செய்தார். நாங்கள் செல்லும்போது, பொருட்களை கைப்பற்றுவதற்கு உபகரணங்கள் எடுத்துச் சென்றோமா என்றால்

எடுத்துச்செல்லவில்லை. நாங்கள் அவ்வாறு போகும்போது சீருடையில்தான் சென்றோம். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடம் திறந்தவெளி என்றால் ரோட்டிலிருந்து 300 மீட்டர் தொலைவில் உள்ள தோட்டத்தில் உள்ளது. நாங்கள் போகும்போது எவ்வளவு தொலைவில் எதிரிகளைப் பார்த்தோம் என்றால் எதிரிகள் ஒரு அறைக்குள் இருந்தார்கள். அவர்கள் அறைக்குள் இருந்ததால் அவர்கள் பேசிக்கொண்டது எங்களுக்குக் கேட்கவில்லை என்றால் சரிதான். எழுமலை காவல் ஆய்வாளர் அந்த இடத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால்  அவர் அங்கு வரவில்லை. காவல் நிலையத்திற்குத்தான் வந்தார். காவல் நிலையத்தில் எதிரிகளை ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே ஆய்வாளர் எதிரிகளை விசாரித்தார் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்தபோது மணி என்ன இருக்கும் என்றால் 00.15 மணிக்கு நிலையம் வந்த பிறகு விசாரித்தார். காவல் நிலையத்தில் வைத்துதான் கைதுக் குறிப்பாணை தயார் செய்யப்பட்டடது என்றால் சரிதான். அந்தக் கைதுக் குறிப்பாணையை தயார் செய்தது ஆய்வாளர் என்றால் சரிதான். எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பியது ஆய்வாளர் என்றால் சரிதான். எதிரி மாரியப்பனிடம் காவல் நிலையத்தில் வைத்துதான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான்.  அதில் ஆர்.ஐ. கருப்பையா மற்றும் தலையாரி சாட்சி கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவத்தின்போது ரோந்து போனதாக எந்த ஆவணங்களும் வழக்குக் கோப்பில் இல்லை என்றால் சரிதான். நான் ரோந்து சென்றதற்கு ஆதாரம் காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் ஜி.டி. என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் ரோந்திற்கு போகவில்லை என்றாலும், சம்பவ இடத்திற்குப் போகவில்லை என்றாலும்,

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் என் உயர் அதிகாரிகள் சொன்னதன்பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 14.12.2023.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.